யாழ்ப்பாணம்

# "தமிழர்களுக்கு அரசு சலுகைகளை வழங்காது"

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 4 இதழ் 306
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19-12-1993

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)
"இந்த நாட்டிலிருந்து பயங்கரவாதம் முற்றாக ஒழித்துக் கட்டப்படவேண்டும். இ[illegible]றுதிகளை அடைவதென்று அரசு தற்போது உறுதி பூண்டுள்ளது"

(4ம் பக்கம் பார்க்க)

## சரிந்து கொண்டிருக்கும் ராணுவத்தை ஜெரிடிசில்வா நிமிர்த்திப் பிடிப்பாரா?

(லண்டன்)
"'இலங்கையின் புதிய தரைப் படைத் தலைவர் ஜெரி டி [illegible] யுத்தகளத்திலும் சரி அதற்கு வெளியேயும் சரி ஏகப்பட்ட வேலைகள் காத்துக்கிடக்கின்றன' 'என்று பி.பி.ஸி. தெரிவித்தது.
பி.பி.ஸி.யில் மேலும்

(2ம் பக்கம் பார்க்க)

## பூநகரி கடற்பரப்பில் 5 படகுகள் மூழ்கடிப்பாம்

(கொழும்பு)
பூநகரிப் பகுதிக்கு அருகில் கடலில் சென்ற ஐந்து படகுகளைக் கடற்படையினர் மூழ்கடித்துவிட்டதாக இலங்கை இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளதாக இலங்கை

(4-ம் பக்கம் பார்க்க)

● யாழ். குடாநாட்டில் —

# கடும் மழை வெள்ளத்தினால்

# பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்தனர்

## வீடுகள், வீதிகளில் பெரு வெள்ளம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த இரு நாட்களாக பெய்த கடும் மழையினால் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பல வீடுகள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியிலுள்ள பலகுளங்களில் வெள்ளம் நிரம்பி வழிவதினால் அவை உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. குளங்கள் இருக்கின்ற இடமே தெரியாமல் யாழ். குடா முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது. பல வீதிகளிலும் பெருவெள்ளம் தேங்கியுள்ளதால் பல இடங்களில் போக்குவரத்துச்செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாழ்ந்தபகுதி வெள்ளத்தில்

என்றுமில்லாதவாறு கடந்த இருநாட்களாக பெய்த மழையினால் யாழ். குடாநாட்டில் உள்ள தாழ்ந்த பிரதேசங்கள் அனைத்திலும் வெள்ளம் நிரம்பி வழிகின்றது. குறிப்பாக குருநகர்ப் பகுதி, யாழ். நாடம் வீதி, கண்டுக்குழி - ஈச்சமோட்டைப் பகுதி, றக்கா ரோட் நரியன்குண்டு பகுதி, யாழ். ஆஸ்பத்திரி வீதி, குடியேற்றத்திட்டம், ஆரியகுளம் பகுதி போன்ற இடங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இப்பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து தேவாலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

குருநகர் தொடர்மாடிப் பகுதியில் கடல்நீர் பெருக்கெடுத்து, குடியிருப்புப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததினால் இப்பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

## வெள்ளக்காடாக காட்சி

கொக்குவில், கோண்டாவில் தாவடிப் பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. கொக்குவில் நந்தாவில் குளம் உடைக்கும் நிலையில் காணப்படுகிறது. காங்கேசன்துறை வீதி வெள்ள வாய்க்கால்கள் வெள்ளத்தினால் நிரம்பி வழிவதுடன், வீதியோர வீடுகள் பலவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. குளப்பிட்டிச் சந்திப் பகுதியில் பிரதான வீதியை மூடி வெள்ளம் பாய்ந்தவண்ணம் உள்ளது.

## வகுப்பறைகளில் வெள்ளம்

யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானம் ஒரு அடிக்கு மேற்பட்ட வெள்ளத்தால் நிறைந்திருக்கிறது. யாழ். இந்து ஆரம்பபாடசாலை இரண்டடிக்கு மேற்பட்ட வெள்ளத்தால் நிறைந்துள்ளது.

யாழ். நகரிலுள்ள பல தனியார் கல்வி நிறுவனங்களிலும் வகுப்பு அறைகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. ஆரியகுளம் வெள்ளத்தால் நிறைந்துள்ளதால் இந்தப் பகுதியைச் சூழவுள்ள இடங்கள் யாவும் இரண்டடிக்கு மேற்பட்ட வெள்ளம் தேங்கிநிற்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வன்னியில் பல குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்!

(கிளிநொச்சி)
கிளிநொச்சி, வவுனியாப் பகுதிகளில் பெய்த கடும்மழையினால் இங்குள்ள பல குளங்களில் வெள்ளம் நிரம்பி வழிவதினால் அவை உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இரணைமடுக்குளத்திலும் பெரும் வெள்ளம் தேங்கி நிற்பதால் உடைப்பெடுக்கலாமென்ற அச்சத்தையடுத்து இப்பகுதியிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## கடந்த இருநாட்களில் 236 மி. லீ. மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
கடந்த 17-ம் திகதி பகல் இரவு 18ம் திகதி பிற்பகல் 5 மணி வரையும் நிகழ்ந்த மழை வீழ்ச்சியானது 236 மில்லி லீற்றர் ஆகும். டிசம்பர் மாதத்தில் இவ்வாறு நாளுக்குரிய மழை வீழ்ச்சி மிக நீண்டகாலமாகப் பெறப்படவில்லை. இம் மழைக்கு தற்கு மாறுவதாகும்

(2-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தூதர்கள் குண்டு வீச்சுக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் அண்மையில் ஸ்ரீலங்கா அரசினால் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களைக் கண்டித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்காவை நேரில் சந்தித்து தமது கண்டனத்தை தெரிவித்தனர் என்று கொழும்புப்

(2ம் பக்கம் பார்க்க

அ.புரம், பொலநறுவை, மட்டு மாவட்டங்களில்

## பெரும் வெள்ள பெருக்கு 40,000 பேர் இடம் பெயர்வு

(கொழும்பு)
அனுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளதாக கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## சமாதான கதவுகள் திறந்தே உள்ளதாம்!

(கொழும்பு)
சமாதானத்துக்கான கதவுகள் திறந்தே உள்ளன. அரசு விடுதலைப்புலிகளுடன் எந்த விடயம் தொடர்பாகவும் பேசத் தயாராக உள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார். அண்மையில் தென்பகுதி

(2ம் பக்கம் பார்க்க)

## வடமேற்கு திசை நோக்கி தாழமுக்கம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மற்றும் பல பகுதிகளில் பெய்துவரும் பெரு மழை இலங்கையின் தென் கிழக்கு கரையோரப் பகுதியில் கிழக்கும் சுக்கமாக 400 கிலோ மீட்டர் விஸ்தரிப்பில் குடாவில் மையம் கொண்

(4ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்



# கடல் தடைச் சட்டத்தினால் 2லட்சம் மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப் பகுதியில் அமுலில் உள்ள அரசின் கடல் வலயச் சட்டத்தின் மூலமாகவும், இராணுவ நடவடிக்கை மூலமாகவும் 2 லட்சத்து 73 ஆயிரத்து 629 மீனவர்கள் பாதிப்பு அடைந்துள்ளனர்.

மேலும் வடபகுதியில் பிடிக்கப்படும் மீன்கள், அப்பகுதி மக்களின் சுயதேவைப் பூர்த்திக்குப் போதுமானதாக இல்லை என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அரசின் கடல் வலயத் தடைச் சட்டத்தின் மூலம் ஆழ்கடல் மீன்பிடித்தல் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் கரையோரங்களில் பழைய கட்டுமரங்களில் மீன் பிடிப்பதுடன், பழைய முறைகளையே பின்பற்றுகின்றனர்.

இதேவேளையில் தென்பகுதியில் சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்கும் மீன் பிடிப்பதற்குப் போதிய வசதிகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும், தமிழ் மீனவர்களுக்கு அரசிடமிருந்து உதவிகள் கிடைப்பதில்லை.

தற்போது வட தமிழீழத்தில் மட்டும் ஒரு லட்சத்து 44 ஆயிரத்து 64 மீனவர்கள் உள்ளனர். யாழ். குடாவில் மட்டும் ஒரு லட்சத்து 1,177 மீனவர்கள் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஈ-சி

---

மணிவாக்கு

உலகின் ஒரு பாதி உலகின் மறு பாதியின் துயரங்களைப் புரிந்து கொள்வதில்லை
- ஜேன் ஆஸ்டீன்

## நமது நோக்கு

### அமைச்சர் அநுரா

அநுரா உயர் கல்வி அமைச்சராகிவிட்டார். லொக்கு பண்டாரா தொடர்ந்தும் கல்வி, கலாசார அமைச்சராக இருப்பார்.

சொந்தக் கையில் நம்பிக்கை இழந்து, தம்பிக் கையில் நம்பிக்கை வைத்து அநுராவை ஐ. தே. க. கைவிடவில்லை.

கைக்கு வந்ததைக் கொண்ட தாயாரின் சுதந்திரக் கட்சி கைவிட்டாலும், ஆனைக் கட்சியான ஐ. தே. க. அரவணைத்து அமைச்சராக்கி விட்டது.

இந்த நாட்டிலே, பல கல்வி அமைச்சர்கள் வந்தார்கள்; போனார்கள். கல்வியிலே புதிய திட்டம், புரட்சிகர மாற்றம், வாழ்வுக்கேற்ற வளமான கல்வி என்றெல்லாம் அமைச்சர்கள் பிரசாரம் செய்து பிரகடனப்படுத்தினார்கள்.

எனினும், தகநாயக்கா போன்றோர் இலவசக் கல்விக்கும் ஆசிரியர் நலனுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

லலித்கூட கல்வியமைச்சராக இருந்து உயர்கல்வியிலே சில மாற்றங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்தார்; ஆனால் அவரால் தொடர்ந்து கல்வியமைச்சராக இருக்க முடியவில்லை.

அநுராவின் தாயார் ஆட்சிக் காலத்தில், வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வி பெறுவதற்கு வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே இருந்தன. அன்னியச் செலாவணிப் பிரச்னை, வெளிநாடு செல்லக் கட்டுப்பாடுகள் இருந்தன.

எனினும், வெளிநாடு சென்று உயர்கல்வி பெற வாய்ப்புப் பெற்ற அநுராவிற்குக் கல்வியின் பெறுமதி தெரியும்.

எனவே, உயர்கல்வியை விரும்பும் தமிழ் மாணவர்களின் பிரச்னைகளை, வெட்டுப்புள்ளி விவகாரங்களை, மானியக்குழு யாழ். மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களுக்கு நிதிவழங்கும் பிரச்சினைகளை அநுரா அலசி ஆராய்ந்து ஆவன செய்வாரா?

தேர்தல் ஆண்டில், பல புதிய கொள்கைகளை அறிவித்து, பொதுமக்களுக்குச் சிறந்த எதிர்காலம் உண்டு எனப் பிரசாரம் செய்வது அரசின் வழமையான செயல்.

கல்வியிலும், பெரும் மாறுதல்கள் இருக்கும் என்ற பிரசாரத்திற்கு மாத்திரம் அநுரா பயன்படுத்தப்படுவாரா?

முன்னையோர் வகுத்த நான்கு வாழ்க்கைப் படிமுறைகளில் முதற்பருவமான பிரமச்சரியம் அறிவைத் தேடும் பருவம். அநுரா அப்பருவத்திலேயே இருந்து கொண்டு உயர்கல்வியைக் கவனிக்கப் போகிறார்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்! இதை அவர் உணரும் காலம் மலர வேண்டும்!

---

## ரூபவாஹினியிலும் சிங்களத்தைத் திணிக்க முயற்சி

(கொழும்பு)

ரூபவாஹினியில் தமிழ் அறிவிப்பாளர்கள், "வணக்கம்" என்பதற்குப் பதிலாக 'ஆயுபோவன்' என்றும் இலங்கை என்பதற்குப் பதிலாக 'ஸ்ரீலங்கா' என்ற சிங்கள சொற்பதங்களையே பிரயோகிக்க வேண்டுமென மொழி ஆணைக்குழுத் தலைவர் டெஸ்மொண்ட் பெர்னாண்டோ ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு முன்னர் விடுத்த வேண்டுகோளை தற்போது வாபஸ் பெற்றுக் கொண்டார்.

முன்னைய இவரின் வேண்டுகோளின்பேரில் ரூபவாஹினி நிர்வாகமும் தமிழ் அறிவிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்திருந்தது.

இதனை அறிந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப், இப்படியான இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்க வேண்டாமென நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து மொழி ஆணைக்குழுத் தலைவர், ரூபவாஹினி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு சகல பணிப்புரைகளையும் வாபஸ்பெற்று பழைய முறையைப் போல் 'இலங்கை — வணக்கம்' ஆகிய பதங்களையே பாவிக்குமாறு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. -கே-இ

---

## பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்னை உடன் தீர்க்கப்படவேண்டும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு உடனடியாகப் பேச்சுவார்த்தை மூலமாகவே தீர்வு காணப்படவேண்டும். நீண்டகாலமாக நடைபெற்று வரும் யுத்தத்தினால், இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதுடன், வெளிநாடுகளிலும் இந்த யுத்தம் இலங்கைக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமாக பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் நெவில் ஜெயவர்த்தன உரையாற்றுகையில் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா உட்பட வேறு பல அரசியல் பிரமுகர்களும் உரையாற்றினார்கள். வி-இ

---

## யுத்தத்தினால் பத்திரிகை விற்பனை அதிகரித்துள்ளது

அமைச்சர் டிரோன்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் தொடரும் யுத்தமானது தென்பகுதி பத்திரிகைகளின் வளர்ச்சிக்கும் விநியோக அதிகரிப்புக்கும் வழிவகை செய்துள்ளது என தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தமிழ் பத்திரிகையாளர்கள் தகவல் தொடர்பாளர்களுடனான சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பி. பி. சி. செய்தியாளர் இலங்கையில் சிவில் யுத்தம் நடைபெறுகிறது என்பதைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்தாராம்.

இலங்கையில் பெரும்பான்மையோர் அமைதியையும் சமாதானத்தையுமே விரும்புகின்றனர். இலங்கை அரசின் உயர் பதவிகளில் இன்னும் தமிழர்கள் அதிகம் வகிக்கின்றனர். 30 வீதம் அல்லது 40 வீதமான அரச ஓய்வூதியம் பெறுவோர் யாழ்ப்பாணத்திலேயே உள்ளனர்.

வடக்கு-கிழக்கு பகுதி மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இலங்கை அரசினாலேயே அனுப்பப்படுகிறது என்றார்.

தினகரன் ஆசிரியர் திரு. சிவகுருநாதன், வீரகேசரி ஆசிரியர் திரு சிவநேசச்செல்வன் மற்றும் ரூபவாஹினி சிரேஷ்ட அதிகாரிகள் தமிழக பத்திரிகையாளர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

---

## மகாத்மாகாந்தியின் பூட்டன் சுட்டுக் கொலை

(லண்டன்)

மகாத்மா காந்தியின் பூட்டன் குஸ்றம் கோபின் என்பவர், நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவில் இனம் தெரியாத ஆயுதக் கோஷ்டியினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து திரு. கோபின் சுடப்பட்டதாகவும், இதற்கான பின்னணி என்ன என்பது பற்றித் தமக்குத் தெரியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொலை செய்த நாதுராம் விநாயக கோட்சேயின் சகோதரரான கோபால் கோட்சேயை நேற்று முன்தினம் பம்பாய் பொலிசார் கைது செய்து பின்னர் பிணையில் செல்ல அனுமதித்ததாகவும் கூறப்படுகிறது.

மகாத்மா காந்தி கொலை செய்யப்பட்ட தினத்தை ஒரு மகிழ்ச்சி நாளாகக் கொண்டாடும்படி பிரசாரம் செய்த திரு. கோபால் கோட்சே உட்பட வேறு நால்வரைக் கைது செய்து பின்னர் பிணையில் செல்ல அனுமதித்தனர். வி-இ

---

## திருவெம்பாவை ஆரம்பம்

(கொழும்புத்துறை)

உதயத்தின் முன் திருவெம்பாவை பூசை நாளை 20ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி சகல இந்துக் கோயில்களிலும் தொடர்ந்து பத்து தினங்கள் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்.

பூசை முடிவில் திருவாதவூரர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை 20 பாடல்களும் பாடப்படும்.

29ம் திகதி புதன் அதிகாலை நடராசர் ஆர்த்திரா தரிசனமும் பூசை வழிபாடும் இடம் பெறும். -154

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

அசெம்பிளி ஒவ் கோட் தேவசபையினரின் நத்தார் தின நிகழ்ச்சிகள் இன்று 19ம் திகதி மாலை 5-00 மணிக்கு மானிப்பாயில் நத்தார் கீதங்களுடன் ஆரம்பமாகி தினமும் நடைபெறும்.

25ம் திகதி காலை 8-30 மணிக்கு நத்தார் ஆராதனை மானிப்பாய், அராலி, சித்தன்கேணி, வண்ணார்பண்ணை, கோப்பாயில் நடைபெறும்.

1994 ஜனவரி 01ம் திகதி காலை 9-00 மணிக்கு புதுவருட ஆராதனை திருவிருந்தும் மாலை 4-00 மணிக்கு புதுவருட ஆராதனை திருவிருந்தும் மானிப்பாய் சித்தன்கேணி, அராலியில் நடைபெறும்.

0 0 0

(கொழும்புத்துறை)

யாழ் குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் விநாயகர் விரதமும் பிள்ளையார் பெருங் கதைப் படிப்பு முடிவும் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் நடைபெறும்

31ஆவது நாளாகிய இன்று பிள்ளையார் பெருங்கதை முடிவை அடுத்து பெருமான் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். (154)

0 0 0

(கொழும்புத்துறை)

சரசாலை நுணாவில் அருள்மிகு ஸ்ரீசிதம்பர விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடும் இடம் பெறும். பிள்ளையார் பெருங்கதை முடிவை அடுத்து மாலை 7-30 மணிக்கு கஜமுகாசூரன் போர் நடைபெறும் (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

"புதிய உலகம்" நடாத்தும் கருத்தரங்கு யாழ் நற்சமூக நடுநிலையத்தில் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்

0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சிக்கன கடன் வழங்கு சமாசத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரியில் இன்று 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாசத்தலைவர் திரு. ச. முருகேசன் தலைமையில் நடைபெறும். (154)

---

## கெற்பலியில் மாவீரர் சோலைவனம் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இதுவரைகாலமும் மண்மீட்புப் போரிலே வீரச்சாவினைத் தழுவிக் கொண்ட மாவீரர்களது நினைவாக மாவீரர் சோலைவனமொன்று கடந்த மாதம் கெற்பலியில் திறந்துவைக்கப்பட்டது.

தென்மராட்சிக் கோட்ட பொறுப்பாளர் திரு. பரணி தேசியக்கொடியை ஏற்றி வைக்க, தென்மராட்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவீரர் சோலைவனத்துக்கான பெயர்ப்பலகையை யாழ். மாவட்டத் தளபதி திரைநீக்கம் செய்துவைத்தார்.

கெற்பலியில் சுமார் 30 ஏக்கர் காணி இந்த மாவீரர் சோலை வனத்துக்கு சேர்க்கப்பட்டிருப்பினும் இம்முறை மாவீரர் வாரத்தில் மட்டும் 10 ஏக்கர் விஸ்தீரணமான காணியில் பல இன மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

---

## டீசல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

டீசலின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல், 20சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் அறிவித்துள்ளது.

1 லீற்றர் டீசலின் முன்னைய விலை ரூபா 12 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## திறைசேரியில் நிதி இல்லை

# மாணவர் உணவு முத்திரை கொடுப்பனவு தாமதம்

(யாழ்ப்பாணம்)

திறைசேரியில் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் யாழ். மாவட்ட பல. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்க வேண்டிய மாணவர் மதிய உணவு முத்திரைக்கான கொடுப்பனவு நிலுவைகள் உடனடியாக வழங்கமுடியாமல் இருப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து திரும்பிய அரச அதிபர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் இக்கொடுப்பனவுகள் யாவும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் வழங்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டப் பல. நோ. கூ. சமக நிர்வாகத்தினர் இந்த மாணவர் மதிய உணவு கொடுப்பனவு நிலுவையை உடனடியாகச் செலுத்துமாறு கோரி, அண்மையில் சமூகசேவைப் பகுதியினருக்கெதிரான மறியல் போராட்டம் ஒன்றை செயலக பிரதான வாசலில் நடத்தியது தெரிந்ததே. 162-இ-ரி)

## அனுராவுக்கு ஜனாதிபதி

# பேனா அன்பளிப்பு

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சராக பதவியேற்ற அனுரா பண்டாரநாயக்காவுக்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பேனா ஒன்றை பரிசளித்துள்ளார். கூரிய வாளை விட வலிமை மிக்கது பேனா என்று டி. பி. விஜயதுங்க பேனாவை பரிசளிக்கும் வைபவத்தின் போது தெரிவித்தார்.

இதேவேளை, அனுரா பண்டாரநாயக்கா பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முக்கிய கவனம் செலுத்தப்போவதாக உயர்கல்வி அமைச்சராக பதவியேற்ற பின்பு கூறியுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (ம-ரி)

## மத்திய மாகாணசபையில்

# இ. தொ. கா. விற்கு எதிராக இனத்துவேஷ நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய மாகாணசபையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்கவிருப்பதால், ஐ. தே. க. வினர் இனத்துவேச நடவடிக்கையில் இறங்கியுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் விசேட கோரிக்கைக்கு இணங்கித்தான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இப்படியாக நடவடிக்கையில் இறங்கியுள்ளது என்று மத்தியமாகாண முதலமைச்சர் இ. தொ. க. மேல் குற்றம் சுமத்தியுள்ளார் என்று 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மலையகத்தில் விடுதலைப்புலிகள் பற்றி விசாரணைகள் தொடங்குவது பல மாகாண உறுப்பினர்களுக்கு தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது போன்ற இனத்துவேச நடவடிக்கையில் ஐ. தே. க. வினர் இறங்கியுள்ளனர் என்றும் விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

## மே. இந்தியா வெற்றி

(கொழும்பு)

இலங்கைக்கும் – மே. இந்தியாவுக்குமிடையில் நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற 3-வது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மே. இந்தியா 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

மேற்படி இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றியும் 2 வது போட்டியில் இலங்கையும் வெற்றிபெற்றது.

வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த இந்த கிரிக்கெட் தொடரின் சிறந்த வீரராக மே. இந்திய அணி வீரர் லாரு தெரிவு செய்யப்பட்டார். —வி

## தாக்குதல் மத்தியிலும் இளவாலி படகுசேவை

(எழுதுமட்டுவாள்)

ஹெலிகொப்டரின் கடும் தாக்குதலின் மத்தியிலும் நேற்றுமுன்தினம் இளவாலி - பூநகரி படகுசேவை நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 6 30 மணியளவில் ஆலங்கேணி இளவாலி கரையோரப்பகுதிகளை நோக்கி ஹெலிகொப்டரிலிருந்து கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலின் மத்தியிலும் படகுசேவை முழுமையாக இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (170 ரி)

## யாழ். குடாநாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

# விவசாய செய்கை அழிவு

யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலுமுள்ள நெல் வயல்களில் நெற்பயிர்களை வெள்ளம்மூடி நிற்கின்றன. மிளகாய் மற்றும் காய்கறிப் பயிர்கள் உட்பட்ட தோட்ட நிலங்களிலும் பெருமளவு மழை வெள்ளம் தேங்கி வழிவதினால் அவை அழியும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல விவசாயிகள் நேற்றுத் தமது நிலத்திலுள்ள வெள்ளத்தினை வெளியேறச் செய்யும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோதிலும் தொடர்ந்து மழை பெய்தமையினால் வெள்ளம் தேங்கி நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பல வீடுகள் சேதமடைந்தன

யாழ். ஆத்திசூடி வீதி மேற்குப் பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. அங்கு குடியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன, பல வீடுகள் சேதத்துக்குள்ளாயின.

இடம் பெயர்ந்தவர்களில் சிலர் யாழ். கலட்டி தமிழ்க் கலவன் பாடசாலையிலும், ஏனையோர் வெவ்வேறு இடங்களிலும் தங்கியுள்ளனர்.

வலி-மேற்குப் பகுதியில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் இப்பகுதியிலுள்ள அகதி முகாம்கள் பலவும் வெகுவும் பாதிக்கப்பட்டுள்ளன.

சங்கானை, சுழிபுரம், மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளிலுள்ள அகதி முகாம்களிலுள்ள சிறிய குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்ததினால் மக்கள் வேறு பாதுகாப்பான இடங்களிலும் பாடசாலைக் கட்டிடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்

## வழுக்கையாறு பெருக்கெடுப்பு

தாழ்நிலப் பகுதிகளிலுள்ள வீடுகளும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. குளங்கள் யாவும் நிரம்பியுள்ளன. வழுக்கையாறும் பெருக்கெடுத்துப் பாய்கின்றது.

சங்கரத்தைக் குளம் நிரம்பி வழிகின்றது. சங்கரத்தை - நவாலி வீதியில் வெள்ளம் நிரம்பி பிரயாணிகள் போக்குவரத்துச் செய்ய முடியாதவகையில் காணப்படுகின்றது. நவாலி வெளியிலுள்ள வீதிகளில் வெள்ளம் நிரம்பி அராலிக் கடற்கரைப் பிரதேசத்தை ஒழுக்கொண்டிருக்கிறது.

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, அராலி, மூளாய், சங்கரத்தை, நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் உள்ள முகாம்களில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களும் சிறு குடிசைகளில் வாழ்ந்த நிரந்தரக் குடியிருப்பாளர்களும் பாதுகாப்பு இடம் தேடவேண்டிய நிலை ஏற்பட்டது.

## வீடுகளில் வெள்ளம் புகுந்தது

நல்லூர் கோயில் வீதியில் பெருமளவு வெள்ளம் காணப்பட்டது. இப்பகுதியிலுள்ள குளம் நிரம்பியதாலும் அதைஅண்டிய வீடுகளிலும் வெள்ளம் புகுந்ததனாலும் அப்பகுதி மக்கள் பலர் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். கந்தர்மடம், அரசடி வீதி பகுதிகளிலும் வெள்ளம் பலவீடுகளினுள் புகுந்துள்ளது. யாழ் நகர் விக்ரோரியா வீதி பகுதி, பலாலி வீதி பகுதிகளிலும் பெருமளவு வெள்ளம் தேங்கியுள்ளது. யாழ் பல்கலைக்கழக வீதி முன் பகுதி வீதியிலுள்ளும் பெருமளவு வெள்ளம் தேங்கியுள்ளது. நேற்று பெய்தமழையினால் கச்சேரியடியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கமொன்றினுள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது.

## வயல்வெளிகளில் வெள்ளப் பாதிப்பு

உடுவில், கந்தரோடை, சுன்னாகம் போன்றபகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல வீடுகளும் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் குடிபெயர்ந்துள்ளனர். வயல்கள் குளங்கள் எல்லாம் ஒரே வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது

அரியாலை மேற்கில் பெரு வெள்ளம் கரை புரண்டோடுகிறது. நாவன்மார்க்கமடு குளம் பெரு மழை காரணமாக நிரம்பி, தண்ணீர் கட்டுக்கடங்காமல் வீதிக்கு மேலாகப் பாய்ந்து செல்கின்றது. இராசேஸ்வரி வீதியில் வெள்ளம் இடுப்பளவிற்கு மேலே சென்றுள்ளது. வயல்களில் பயிர்கள் அனைத்தையும் மூடி வெள்ளம் காணப்படுகின்றது. மருதடிக் கோவிலில் ஏற்பட்ட வெள்ளத்தால் இக்குளம் நிரம்பி வீதியின் குறுக்காக 2 அடி உயரத்திற்கு மேலே நீரோட்டம் நிறைந்து காணப்படுகின்றது.

செம்மணிக் கடலில் பெருமளவு வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் செம்மணி அணைக்கட்டை மேவி நேற்று வெள்ளம் பாய்ந்தோடியதைக் காணக்கூடியதாக இருந்தது. இதேபோன்று தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் பகுதி உட்பட குடாநாட்டின் அனைத்து இடங்களிலுமுள்ள பரவைக் கடல் பகுதிகளிலும் பெரு வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

—வ-வி-162-158-72-139-109-161-59-ரி

## ஜனாதிபதி வேட்பாளராக டி. பி.க்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அடுத்தவருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலில் ஐ. தே. க சார்பில் போட்டியிட தற்போதைய ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவுக்கு மேற்படி கட்சியின் பொதுக்குழு நேற்று அங்கீகாரம் வழங்கியது.

ஐ. தே. கட்சியின் செயற்குழு முன்னர் எடுத்த மேற்படி முடிவை நேற்று பொதுச்சபை அங்கீகரித்தது. (வி

## சமாதான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோது பிரதமர் இவ்வாறு கூறியதாக அகில இந்திய வானொலி தெரிவித்தது.

விடுதலைப்புலிகள் பாதுகாப்புப்படையினருக்கு எதிராக ஆயுதங்களை ஏந்தியிருப்பதன் காரணமாகவே படையினர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ ரி)

## தமிழர்களுக்கு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சியின் 39-வது வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று கொழும்பு சுகததாஸா விளையாட்டரங்கில் நடைபெற்றபோது ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கூறினார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

"இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்றதொன்று கிடையாது. இங்கு பயங்கரவாத பிரச்சினைதான் உள்ளது. வடக்கையும் கிழக்கையும் பிரித்தால்தான் இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

வடக்கு—கிழக்குப் பகுதி மக்களுக்கு இந்த அரசு எந்தவிதமானவேலைதிசலுகைகளையும் ஒருபோதும் வழங்காது கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் நடந்தே தீரும். வடக்கு—கிழக்கு மக்களுக்கு சம்பளம், ஓய்வூதியம், உணவுப் பொருட்களுக்கு இந்த அரசு பெருமளவு பணத்தை செலவு செய்து வருகின்றது என்று கூறினார். —ஸ்-ரி

## பூநகரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வானொலி தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் மேற்படி கடற்பரப்பில் இந்த ஐந்து படகுகளை இலங்கைக் கடற்படையினர் மூழ்கடித்துவிட்டதாகவும் இப்படகுகளில் சில, தற்போது கடலில் மிதந்து கொண்டிருப்பதாகவும் இச்சம்பவத்தில் கடற்படையினர் நால்வருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மேற்படி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பூநகரிக்குள் ஊடுருவ முயன்ற நால்வர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது (வி-ரி)

## வன்னியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன்னிப்பகுதியின் பலஇடங்களில் நேற்று பெய்த பெரும் மழையினால் நூற்றுக்கணக்கான மக்கள் தமது வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர்

கிளிநொச்சிப்பகுதியில் பல மரங்கள் வேரோடு சாய்ந்ததினால் பல இடங்களில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன் நூற்றுக்கு மேற்பட்ட குடிசைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மணலாற்றுப் பகுதியிலும் வெள்ளத்தினால் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாகி பாடசாலைகளிலும், பொது கட்டிடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளார். (வி)

## வடமேற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள தாழமுக்கம்தான் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாழமுக்கம் மேலும் அதிகரிக்கலாமென்றும், இது வடமேற்கு திசையை நோக்கி நாட்டின் கிழக்குக் கரையோரத்தை அடையலாம் என்றும் வளிமண்டல அறிக்கை தெரிவித்துள்ளது. —ம-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தொலைபேசி யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 336/Bi